05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# சரியான உச்சரிப்புடன் வாசிக்கும் திறனை பவ்டூண் (Powtoon) செயலியின் வழி மேம்படுத்துதல்

# MENINGKATKAN KEMAHIRAN MEMBACA DENGAN SEBUTAN YANG BETUL MELALUI APLIKASI POWTOON

திவாகர் மணிவண்ணன்

DHIWAHAR A/L MANIVANAN

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம்

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

2023

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# சரியான உச்சரிப்புடன் வாசிக்கும் திறனை பவ்டூண் (Powtoon) செயலியின் வழி மேம்படுத்துதல்

# MENINGKATKAN KEMAHIRAN MEMBACA DENGAN SEBUTAN YANG BETUL MELALUI APLIKASI POWTOON

திவாகர் மணிவண்ணன்

**DHIWAHAR A/L MANIVANAN**

இந்த ஆய்வு தமிழ்மொழிக் கல்வியியலில் இளங்கலைப் பட்டத்தைப் பெருவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்டது.

**LATIHAN ILMIAH INI DIKEMUKAKAN BAGI MEMENUHI SEBAHAGIAN SYARAT UNTUK MEMPEROLEH IJAZAH SARJANA MUDA PENDIDIKAN BAHASA TAMIL DENGAN KEPUJIAN**

05-4506832 pustaka.upsi.edu.my ptbupsi

தமிழ்மொழிப்பிரிவு, நவீன மொழித்துறை மொழி தொடர்பியல் புலம்

**PROGRAM BAHASA TAMIL, JABATAN BAHASA MODEN**

**FAKULTI BAHASA DAN KOMUNIKASI**

**UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS**

**2023**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
SULTAN IDRIS EDUCATION UNIVERSITY

**படைப்புரிமை உறுதிமொழி**

PERAKUAN KEASLIAN PENULISAN

இந்த உறுதிமொழி _____ (நாள் (_____ ( மாதம் (2023 அன்று வழங்கப்பட்டது .

Perakuan ini telah dibuat pada seperti tarikh di atas.

i. **மாணவர் உறுதிமொழி )Perakuan Pelajar):**

தமிழ்மொழிக் கல்வியியல் இளங்கலைப் பட்டத்திற்காக **சரியான உச்சரிப்புடன் வாசிக்கும் திறனை *பவ்டூண்* (Powtoon) செயலியின் வழி மேம்படுத்துதல்** எனும் தலைப்பிலான இந்த ஆய்வேடு என்னுடைய சொந்த முயற்சியால் உருவாக்கப்பட்டது என மொழி தொடர்பியல் புலத்தின் மாணவனாகிய நான் **திவாகர் த/பெ மணிவண்ணன்) D20191089899** உறுதிமொழி வழங்குகின்றேன். இந்த ஆய்வில் பதிப்புரிமையுடைய படைப்புகள் யாவும் அனுமதி பெறப்பட்டு அவற்றின் மூலங்களைக் குறிப்பிட்டதோடு, துணைபுரிந்த அனைத்து மேற்கோள்களும் துணைநூற்பட்டியலில் முறையாகவும் தெளிவாகவும் எழுதப்பட்டுள்ளன .

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

Saya, **Dhiwahar A/L Manivanan (D20191089899)** dari **FAKULTI BAHASA DAN KOMUNIKASI,** dengan ini mengaku bahawa projek penyelidikan yang bertajuk **MENINGKATKAN KEMAHIRAN MEMBACA DENGAN SEBUTAN YANG BETUL MELALUI APLIKASI POWTOON** adalah hasil kerja saya sendiri. Saya tidak memplagiat dan apa-apa penggunaan mana-mana hasil kerja yang mengandungi hak cipta telah dilakukan secara urusan yang wajar dan bagi maksud yang dibenarkan dan apa-apa petikan, ekstrak, rujukan atau pengeluaran semula daripada atau kepada mana-mana hasil yang mengandungi hak cipta telah dinyatakan dengan sejelasnya dan secukupnya.

_______________________________

மாணவர் கையொப்பம் / Tandatangan pelajar

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

I.நெறியாளர் உறுதிமொழி )Perakuan Ponyella):

**சரியான உச்சரிப்புடன் வாசிக்கும் திறனை *பவ்டூண்* (Powtoon) செயலியின் வழி மேம்படுத்துதல்** என்ற தலைப்பிலான இந்த ஆய்வேடு **திவாகர் த/பெ மணிவண்ணன் )D20191089899(** என்ற மாணவரின் சொந்த முயற்சியால் உருவாக்கப்பட்டது என ஆய்வு நெறியாளராகிய நான், **முனைவர் காமினி கணபதி** உறுதிமொழி வழங்குகின்றேன் இந்த ஆய்வேடு தமிழ்மொழிக் கல்வியியல் இளங்கலைப்பட்டத்தைப் பெறுவதற்காக மொழி தொடர்பியல் புலத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.

Saya, **DR. KAAMINY A/P KANAPATHY** dengan ini mengesahkan bahawa hasil kerja pelajar yang bertajuk **'MENINGKATKAN KEMAHIRAN MEMBACA DENGAN SEBUTAN YANG BETUL MELALUI APLIKASI POWTOON'** dihasilkan oleh pelajar seperti nama di atas, dan telah diserahkan kepada **FAKULTI BAHASA DAN KOMUNIKASI** bagi memenuhi sebahagian syarat untuk memperoleh **IJAZAH SARJANA MUDA PENDIDIKAN (BAHASA TAMIL) DENGAN KEPUJIAN.**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

நாள் / Tarikh

நெறியாளர் கையொப்பம் / Tandatangan Penyelia

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# நன்றியுரை

நமச்சிவாய வாழ்க! நாதன் தாழ் வாழ்க! இவ்வாய்வுப் பணி இனிதே நிறைவுப் பெற திருவருள் புரிந்த இறைவனின் திருவடியைச் சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன். இவ்வாய்வினை மேற்கொள்ள எனக்கு அனுமதியளித்த சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகத் தமிழ்மொழிப் பிரிவுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாய்வுச் சிறந்த முறையில் ஆக்கம் பெறவும் திட்டமிட்டப்படி செய்து முடிக்கவும், வழிகாட்டி எம்மைக் கொண்டு வந்த விரிவுரைஞர் முனைவர் கிங்ஸ்டன் பால்தம்புராஜ் அவர்களுக்கும் ஆய்வு நெறியாளரும் வழிகாட்டியுமான முனைவர் காமினி கணபதி அவர்களுக்கும் என் நன்றியைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், இவ்வாய்விற்கான தரவுகளைத் திரட்டுவதற்கு உறுதுணையாக இருந்த பேரா சுங்கை இடைநிலைப்பள்ளி பள்ளி முதல்வருக்கும், தமிழாசிரியர் ஹேமாநந்தினி அவர்களுக்கும், படிவம் இரண்டு தமிழ்மொழிப் பாட மாணவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், நான் துவண்டு விழும் பொழுது என் மனத்திற்குத் தைரியத்தையும் மனவலிமையையும் ஊட்டிய என் பெற்றோர் திரு. திருமதி மணிவண்ணன் பூமலர் தேவி  அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியினைச் சமர்பிக்கிறேன். மேலும், இவ்வாய்வை நன்முறையில் செய்து முடிக்க பல வழிகளில் உதவிகளைப் புரிந்த அன்பிற்கினிய திவ்யாதர்ஷினிக்கும் அன்புத் தம்பிகளான சத்திசு, நாராயணமூர்த்தி, சர்வின்ராஜ் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் இத்தருணத்தில் உள்ளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் நன்றி. வணக்கம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**ஆய்வுச் சாரம்**

சரியான உச்சரிப்புடன் வாசிப்பதில் இரண்டாம் படிவ மாணவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களையும் அதற்கான காரணங்களையும் கண்டறிந்து, *பவ்டூண்* செயலியின் வழி மாணவர்களின் சரியான உச்சரிப்புடன் வாசிக்கும் திறனை மேம்படுத்துவது இந்த ஆய்வின் நோக்கமாகும். இந்த ஆய்வுப் பண்புசார் முறை மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வுப் பேரா மாநிலத்தில் சுங்கை வட்டாரத்தில் உள்ள ஓர் இடைநிலைப் பள்ளியில் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்விற்கு ஆய்வாளரால் பத்து இரண்டாம் படிவ மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களில் மாணவர்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டதோடு பத்து மாணவர்களும் ஆய்வுக் கட்டுக்குப்படுத்தப்பட்டுள்ளனர். இவ்வாய்வில் உற்றுநோக்குதல், முன்னறித் தேர்வு, நேர்காணல் ஆகிய முறைகள் தரவுகளைத் திரட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வாளர் ஐந்து வாரங்களுக்குப் *பவ்டூண்* செயலியின் துணையோடு மாணவர்களுக்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு அவர்களின் சரியான உச்சரிப்புடன் வாசிக்கும் திறனை மேம்படுத்தியுள்ளார். முன்னறித் தேர்வில் மாணவர்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட அனைவரும் சிறந்த அடைவுநிலையை அடையவில்லை. ஆய்வாளர் நடவடிக்கைகளை மேற்கொண்ட பிறகு நடத்தப்பட்ட *பவ்டூண்* பங்களிப்பின் மூலம் அனைத்து மாணவர்களும் மிகவும் சிறந்த புள்ளிகளைப் பெற்றுள்ளனர். ஆகவே, *பவ்டூண்* செயலியின் வழி மாணவர்களின் சரியான உச்சரிப்புடன் வாசிக்கும் திறன் மேம்பட்டுள்ளதாக ஆய்வின் முடிவு காட்டுகிறது.


திறவுச்சொற்கள்: வாசிப்பு, உச்சரிப்பு, *பவ்டூண்*

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**IMPROVING READING SKILLS WITH CORRECT PRONUNCIATION THROUGH POWTOON APP**

## ABSTRACT

The purpose of this study is to find out the problems faced by secondary school students in reading with correct pronunciation and their reasons, and to improve the students' ability to read with correct pronunciation through Powtoon application. This study used only qualitative method. This study was conducted in a secondary school in Sungkai district of Perak state. For this study, ten secondary students were selected by the researcher and among them the students were subjected to the study and ten students were controlled. In this study observation, pre-test and interview methods were used to collect data. The researcher conducted activities for the students with the help of Powtoon application for five weeks to improve their reading ability with correct pronunciation. Initially, not all of the students surveyed in the pre-test achieved the ideal level. All the students scored very well with the help of Powtoon application after conducting the research activities. Therefore, the results of the study show that the students' ability to read with correct pronunciation has improved through usage of Powtoon application.

Keywords: reading, powtoon, pronunciation

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**பொருளடக்கம்**


| | பக்கம் |
|---|---|
| **படைப்புரிமை உறுதிமொழி** | i |
| **நன்றியுரை** | iii |
| **ஆய்வுச் சாரம் (தமிழ்)** | iv |
| **ஆய்வுச் சாரம் (ஆங்கிலம்)** | v |
| **பொருளடக்கம்** | vi |
| **அட்டவணைப் பட்டியல்** | xi |
| **வரைபடப் பட்டியல்** | xii |
| **பின்னிணைப்புப் பட்டியல்** | xiv |
| **இயல் 1 – ஆய்வு அறிமுகம்** | |
| 1.1. முன்னுரை | 1 |
| 1.2. ஆய்வுப் பின்னணி | 2 |
| 1.3. ஆய்வுச் சிக்கல் | 4 |
| 1.4. ஆய்வு நோக்கம் | 6 |
| 1.5. ஆய்வு வினா | 6 |
| 1.6. ஆய்வு நன்மைகள் | 7 |
| 1.6.1. மாணவர்கள் | 7 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.6.2. ஆசிரியர்கள் 8

1.6.3. கல்வி அமைச்சு 8

1.7. ஆய்வு எல்லை 8

1.8. ஆய்வுச் சான்றாதாரம் 10

1.8.1. முதன்மைச் சான்றாதாரம் 10

1.8.2. துணைமைச் சான்றாதாரம் 10

1.9. கலைச்சொற்கள் விளக்கம் 11

1.9.1. வாசிப்பு 11

1.9.2. உச்சரிப்பு 12

1.10. தொகுப்புரை 13

**இயல் 2 – முந்தைய ஆய்வுகள்**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

2.1. முன்னுரை 14

2.2. வாசிப்பு 15

2.3. உச்சரிப்பு 17

2.4. தொடர்பு, இடைவெளி 24

2.5. தொகுப்புரை 26

**இயல் 3 – ஆய்வு நெறிமுறை**

3.1. முன்னுரை 27

3.2. ஆய்வு வடிவமைப்பு 28

3.3. ஆய்வுக் கட்டமைப்பு 29

3.4. ஆய்வு அணுகுமுறை 30

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

3.5. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டோர் 30

3.6. ஆய்வுக் கருவி 32

3.6.1. முன்னறித் தேர்வு பாரம் 33

3.6.2. வாசிப்பு பனுவல் 34

3.6.3. பின்னறித் தேர்வு பாரம் 35

3.6.4. கருத்தறிவினா நிரல் பாரம் 36

3.6.5. ஆய்வுக் கருவி ஏற்புடைமை 37

3.6.6. ஆய்வுக் கருவி நம்பகத்தன்மை 39

3.7. தரவுச் சேகரிப்பு முறை 41

3.7.1. முன்னறித் தேர்வு பாரம் 42

3.7.2. பின்னறித் தேர்வு பாரம் 42

3.7.3. கருத்தறிவினா நிரல் பாரம் 43

3.8. 1,2,3 அணுகுமுறை 44

3.9. ஆய்வுக் கால வரையறை 50

3.10. தரவுப் பகுப்பாய்வு முறை 51

3.10.1. முதல் நோக்கம் 51

3.10.2. இரண்டாவது நோக்கம் 57

3.10.3. மூன்றாவது நோக்கம் 58

3.11. ஆய்வுக் கோட்பாடு 59

3.12. ஆய்வுக் கோட்பாடுக் கட்டமைப்பு 63

3.13. தொகுப்புரை 64

**இயல் 4 – ஆய்வு முடிவுகள்**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.1. முன்னுரை 65

4.2. ஆய்வு வினா 1 66

4.2.1. மாணவர் 1 68

4.2.2. மாணவர் 2 69

4.2.3. மாணவர் 3 70

4.2.4. மாணவர் 4 71

4.2.5. மாணவர் 5 72

4.3. ஆய்வு வினா 2 76

4.3.1. மாணவர் 1 78

4.3.2. மாணவர் 2 79

4.3.3. மாணவர் 3 81

4.3.4. மாணவர் 4 82

4.3.5. மாணவர் 5 84

4.4. ஆய்வு வினா 3 90

4.5. தொகுப்புரை 91

**இயல் 5 – கருத்துரையும் முடிவுரையும்**

5.1. முன்னுரை 92

5.2. ஆய்வுக் கண்டுபிடிப்புகள் 93

5.2.1. ஆய்வு நோக்கம் 1 94

5.2.2. ஆய்வு நோக்கம் 2 97

5.2.3. ஆய்வு நோக்கம் 3 100

5.3. தொடர் ஆய்வுகளுக்கான பரிந்துரைகள் 102

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

5.4. தொகுப்புரை 104

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## அட்டவணைப் பட்டியல்

**அட்டவணை எண்** **பக்கம்**


3.1. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட மாணவர்களின் விவரம் 32

3.2. முன்னறித் தேர்வு பார மூலம் 33

3.3. வாசிப்புப் பனுவல் மூலம் 35

3.4. கருத்தறிவினா நிரல் பாரத்தின் விவரம் 36

3.5. முன்னறி, பின்னறித் தேர்வு பாரத்தின் ஏற்புடைமை முடிவுகள் 37

3.6. வாசிப்புப் பனுவலின் ஏற்புடைமை முடிவுகள் 38

3.7. கருத்தறிவினா நிரல் பாரத்தின் ஏற்புடைமை முடிவுகள் 38

3.8. பனுவல் கடினநிலை வரைமானம் 40


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


3.9. பனுவல்களின் கடினநிலை முடிவுகள் 40

3.10. கருத்தறிவினா நிரல் பாரத்தின் நம்பகத்தன்மை முடிவுகள் 41

3.11. ஆய்வுக்குத் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் 46

3.12. ஆய்வுக் கால வரையறை 50

3.13. முன் அண்ண உச்சரிப்பின் தர அடைவுநிலை 54

3.14. இடையண்ண உச்சரிப்பின் தர அடைவுநிலை 55

3.15. கடையண்ண உச்சரிப்பின் தர அடைவுநிலை 56

4.1 முன்னறித் தேர்வில் மாணவர்களின் அடைவுநிலை 73

4.2 பின்னறித் தேர்வில் மாணவர்களின் அடைவுநிலை 86

4.31,2,3 அணுகுமுறை பற்றி மாணவர்களின் கருத்துகள் 90


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**வரைபடப் பட்டியல்**

**வரைபட எண்** **பக்கம்**

3.1. ஆய்வுக் கட்டமைப்பு 29

3.2. ஆய்வுக் கோட்பாடுக் கட்டமைப்பு 63

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# இயல் 1

## அறிமுகம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.1 முன்னுரை

நம் நாட்டின் கல்விக் கொள்கைக்கேற்ப இடைநிலைப்பள்ளியில் தமிழ்மொழி ஒரு கூடுதல் மொழிப் பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. இதற்குக் கலைத் திட்டம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தொடக்கப் பள்ளித் தமிழ்க் கலைத்திட்டத்தின் வளர்ச்சியாக விரிவடைகிறது. தமிழ்மொழி ஆற்றலைத் தொடக்கப் பள்ளியிலிருந்து மேலும் வளப்படுத்துவதோடு தேசியக் கல்வித் தத்துவத்திற்கிணங்க மாணவர்களின் அறிவாற்றல், ஆன்மிகம், உடல், உள்ளம் ஆகிய கூறுகளில் சமன்நிலை வளர்ச்சி அடைவதை இக்கலைத் திட்டம் வலியுறுத்துகிறது (KSSM கலைத்திட்டம், 2016).

21 ஆம் நூற்றாண்டு கற்றல் கற்பித்தலில் அதிநவீன டிஜிட்டல் வகுப்பறையில் நடத்தப்பட வேண்டும் என்பது மலேசியக் கல்வி அமைச்சின் திட்டமாகும். அந்த அதிநவீன டிஜிட்டல் வகுப்பறையில் எல்சிடி, கெட்ஃபோன் ஆகியவைச் சிறந்த ஒன்றாகும். மேலும், இவை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பல வழிகளில் கற்றல் கற்பித்தலை மேம்படுத்த பயன்மிக்கதாக அமைக்கும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

21 ஆம் நூற்றாண்டில் உலக அளவிலான சாவல்களை எதிர்கொள்ள மலேசியக் கல்வி வளர்ச்சி திட்டத்தின் கீழ் 2013-2025 (KPM 2013); கற்பித்தல் தரத்தை மேம்படுத்த தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின் பயன்பாடு வலியுறுத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு

அவ்வ துறைவது அறிவு. (குறள்: 426)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


எனத் திருக்குறளில் வள்ளுவர் காலத்தோடு பொருந்தி இருக்க வேண்டும் என்கிறார். அவ்வாறு இருக்கும் வகையில் தமிழ் மொழியின் கற்றல் கற்பித்தலிலும் தொழில்நுட்பம் பயன்படுத்தி கற்பிக்க வேண்டியது ஒவ்வொரு ஆசிரியரின் கடமையாகும்.

21ஆம் நூற்றாண்டு கற்றல் கற்பித்தலில், குடியியல்சார் அறிவு, உலகலாவிய விழிப்புணர்வு, பிற கலாச்சாரங்களைப் புரிந்து கொண்டு கையாளக்கக்கூடியத் திறன்கள், நுண்ணாய்வு, புத்தாக்ககப்புனைவுத் திறன்கள், தகவல், கருத்துப் பரிமாற்றத் திறன்கள் போன்ற திறன்கள் அடங்குகின்றன. கல்வியின்பால் மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டி விளைபயன்மிக்க கற்றல் கற்பித்தல் நடவடிக்கையை நடத்த அரசாங்கம் அமலுக்குக் கொண்டு வந்துள்ளன. இந்த அணுகுமுறையைப் பல பள்ளிகள் மிகச் சிறப்பாகக் கையாளுகின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

21 ஆம் நூற்றாண்டு கற்றல் கற்பித்தல் தொழில்நுட்பத்தின் பங்கு மிக அவசியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. இன்றைய காலத்தில் தொழில்நுட்பத்தைக் கொண்டு கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் நடத்துவது மாணவர்களுக்குக் கல்வியில் முன்னேற பெரும் உதவியாக இருக்கிறது என்றால் அது மிகையாகாது (முகுந்தன், 2016). அந்த வகையில் இந்தச் செயல் அறிக்கை தொழில்நுட்பத்தின் வளர்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட ஒன்றான *பவ்டூண்*

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


(Powtoon) காணொளியைக் கொண்டு படிவம் இரண்டாம் மாணவர்களின் சரியான உச்சரிப்புடன் வாசிக்கும் கற்பித்தலை மேம்படுத்த முன்னோடியாக அமைகிறது.

## 1.2 ஆய்வுப் பின்னணி

21ஆம் நூற்றாண்டு கற்றல் கற்பித்தலில் வரையறுக்கப்பட்ட கூறுகளில் தொழில்நுட்பத்தின் பயன்பாடு ஒன்றாக அமைகிறது. அந்த வகையில் கால மாற்றத்திற்கு ஏற்ப புதிய நவீன முறைகளைக் கண்டு பிடித்து, கற்றுக் கொண்டு, அம்முறைகளைக் கற்றல் கற்பித்தல் தொடர்பான நடவடிக்கைகளில் பயன்படுத்தி மாணவர்களின் தமிழ்மொழி கற்கும் ஆர்வத்தை வளர்க்க வேண்டியது தமிழ் மொழிப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களின் கடமையாகும். இதனால், மாணவர்கள் மொழிபாடத்தில் ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் ஏற்படுத்த கணினி சார்ந்த கூறுகளைத் தமிழ்க் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த வேண்டும் (சதீஷ், 2010).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மொழித் திறன்களில் கல்விக்கு மூலக் காரணமாக விளங்குவது வாசிப்பு எனலாம். மாணவர்கள் கற்கும் காலத்திலும் கற்ற பின்னரும் அறிவு பெறும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


கருவியாகத் திகழ்வது வாசிப்பாகும். கற்றலின் திறவுகோல் வாசிப்புத் திறன் என்றும் சொல்லலாம். ஒருவரின் மொழி ஆற்றலுக்கு அவரின் வாசிப்புத் திறனே அடித்தளமாக உள்ளது. அதிகம் வாசிப்பதால் அதிகமான சொற்களஞ்சியங்கள் பெருகுகின்றன. இஃது எழுத்துத் திறனுக்குத் துணைபுரிகிறது. வாசிப்பு என்பதற்கு அறிஞர்கள் பல வரையறைகள் தந்துள்ளனர். வாசிப்பு என்பது கையெழுத்தில் உள்ளதை (வரிவடிவம்) கண்ணால் பார்த்து வாயால் உச்சரித்து, (ஒலி வடிவம்) பொருள் உணரும் செயலாகும் (ந.சுப்புரெட்டியார், 2010). வாசிப்பு என்பது எழுத்து வடிவில் உள்ளவற்றைப் புரிந்து கொள்வதே ஆகும். ஒருவர் வாசிப்பதைப் புரிந்து கொள்வதன் மூலம் அவரின் பேச்சுத் திறனையும் பொது அறிவையும் வளர்க்க முடியும் (எரிக்ஸ், 1980). வாசிப்புத் திறனை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை மௌன வாசிப்பு மற்றும் உரக்க வாசித்தல் ஆகும். மௌன வாசிப்பு என்பது அச்செழுத்து அல்லது கையெழுத்து ஆகிய ஒன்றினை உரக்க வாய்விட்டு வாசிக்காமல் மனத்துக்குள்ளேயே வாசித்துப் பொருள் உணர்தல் ஆகும். உரக்க வாசித்தல் என்பது எழுத்துகளைக் கண்களால் பார்த்து அதற்கேற்ப அதை வாயால் ஒலி வடிவத்தில் உச்சரித்துச் சொல்லிப் பொருளை உணரும் செயற்பாங்கினைக் கொண்டதாகும் .

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இந்த 21ஆம் நூற்றாண்டில் வெற்றி பெறுவதற்கு உயர்நிலை வாசிப்பு ஆற்றல் எதிர்ப்பார்க்கப்படுகிறது. இன்றைய பள்ளிகளின் சுற்றறிக்கையில் வாசிப்புத் திறனுக்கு முதன்மை வழங்கப்படுகிறது (எலெயானோல் டுபம் & மார்கரெட் ஆட்பிஸ்,1981) படிவத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்ட இடைநிலைப் பள்ளிகளுக்கான தர அடிப்படையிலான கலைத்திட்டத்தில் வாசிப்புத் திறன்களுக்கான கற்றல் தரங்களும் இணைக்கப்பட்டுள்ளன. இடைநிலைப்பள்ளியின் இறுதியில் மாணவர்கள் அறிவும் கருத்தும் பெறுவதற்குப் பல்வேறு மூலங்களிலிருந்து, வாசித்துத் தகவல்களைப் பெறுவர் வாசிப்பு உத்திகளைப் பயன்படுத்திப் பல்வேறு எழுத்துப் படிவங்களை வாசித்துப் புரிந்து கொள்வர் எனும் நோக்கங்களை மலேசியக் கலைத்திட்டப் பிரிவு, 2017 வகுத்துள்ளது. 21ஆம் நுற்றாண்டின் மலேசியக் கல்விக் கொள்கையின் படி மாணவர்கள் எல்லாத் திறன்களையும் சமமாக அடைந்திருத்தல் அவசியமாகும் (மலேசியக் கல்வி கொள்கை). அவ்வகையில் வாசிப்புத் திறனில் ஒரு பிரிவான உரக்க வாசித்தலுக்கும் உள்ளடக்கத் தரம் இணைக்கப்பட்டுள்ளது. சரியான வேகம், தொனி, உச்சரிப்பு, ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர் என்பதே உரக்க வாசித்தலுக்குத் தர அடிப்படையிலான கலைத்திட்டத்தில் வரையறுக்கப்பட்ட உள்ளடக்கத் தரமாகும். இவ்வுள்ளடக்கத் தரத்தை ஆசிரியர்கள் எவ்வாறு மாணவர்களிடத்தில்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


கொண்டு செல்வர்? மாணவர்களின் அடைவு நிலை என்ன? என்பதே இங்கு கேள்விக் குறியாகும் மலேசியக் கல்வி மேம்பாட்டுத் திட்டம் (PPPM) 2013-2025 வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்ட முதலே தொழில்நுட்பத்தின் தாக்கத்தைக் கல்வித் துறையிலும் காண முடிகிறது என்பது வெள்ளிடை மலையாகும்.

இதுபோன்ற உள்ளடகத் தரங்களைக் கொண்டு கற்றல் கற்பித்தல் நடவடிக்கையை நடத்துவதால் மாணவர்கள் வாசித்தப் பல்வேறு படிவங்களின் கருத்தைப் புரிந்து கொண்டு அதன் தொடர்பான விளைபயன்மிக்கக் கருத்துரை, மதிப்பீடு, பொருள்பெயர்ப்பு ஆகியவற்றைச் செய்வர். ஆகவே, வாசிப்புத் திறனை மேம்படுத்தத் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டப் *பவ்டூண்* காணொளியைப் பயன்படுத்துவது மாணவர்களிடையே பெரும் வரவேற்பைத் தரும் என்ற நம்பிக்கையில் ஆய்வாளர் இவ்வாய்வை மேற்கொண்டுள்ளார் .

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.3 ஆய்வுச் சிக்கல்

இன்றைய காலக்கட்டத்தில் கல்வியில் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியில் அதிகமான பங்கு இருக்க வேண்டும் என கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது. இதன் காரணமாக, 21 ஆம் நூற்றாண்டு கற்றல் கற்பித்தலை வரையறுக்கப்பட்ட கூறுகளில் தொழில்நுட்பமும் ஒன்றாகக் கருதப்படுகின்றது. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டால் கல்வியில் மாணவர்களின் ஆர்வம் அதிகப்படுத்தும் நிலையில் அவர்களின் அடைவுநிலையையும் சிறப்பாக இருக்கும் என ஓர் ஆய்வில் நிரூபிக்கப்பட்டுள்ளது (கேநெசெக், ஜி. 2000). ஒரு மாணவன் கல்வியறிவைப்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பெருகுவதற்கு வாசிப்புத் திறன் அடிப்படையாக விளங்குகிறது. வாசிப்பு இருந்தால் மட்டுமே எளிய முறையில் ஒரு மாணவன் தன்னுடைய கல்வி அறிவைப் பெருக்கிக் கொள்ள முடிகின்றது. வாசிப்புச் சிக்கலாக அதிலும் குறிப்பாக உச்சரிப்பில் சிக்கல் கொண்டிருக்கும் மாணவனுக்குக் கல்வியில் உண்மையாகப் புரிந்துணர்வு குறைவாக இருக்கும் (முகமட் மஜீத்ரூபா, 2014).

தொழில்நுட்பம் கல்வியில் முக்கியப் பங்கு கொண்டிருந்தாலும் சில ஆசிரியர்கள் அதனைச் சரியான முறையில் கையாள மறுக்கின்றனர். இதற்கு முதன்மைக் காரணமாக விளங்குவது தொழில்நுட்பத்தின் ஆளுமை குறைவு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


என்கின்றார்கள். மொழிப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் தொழில்நுட்பத்தைக் கையாளுவதில் பெரிய சிக்கலை எதிர்நோக்குகின்றனர் (எலிசபெத்தா காஜே, 2010). மேலும், தொழில்நுட்ப அறிவு குறைவாக இருக்கும் ஆசிரியர்கள் தங்களின் கற்றல் கற்பித்தலைத் திரைமுறைச் செயலி கொண்டு பயன்படுத்துகின்றனர். சில காலங்களுக்கு முன்பு கண்டுபிடிக்கப் பட்ட இந்தச் செயலி தற்போது அதிகமாகக் கல்வியில் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் *பவ்டூண்* செயலியைப் பற்றி நிறைய ஆசிரியர் அறிந்து கொள்வதில்லை. இதனைப் பற்றி தெரிந்து வைத்திருக்கும் ஆசிரியர்களுக்கும் *பவ்டூண்* காணொளித் தொடர்பான புரிதல் மிகக் குறைவாக உள்ளது (எஸ் ஃபிரிஸ்னாய்ரி, எம் பி டாரார்ரி & என் ஆர் ரெஃபிசிஸ், 2018).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஒரு மாணவனின் கல்வித் தரம் உயர வாசிப்புத் திறன் பெரும் பங்காற்றினாலும் மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கம் மிகவும் குறைவாக உள்ளது. தொடக்க நிலையிலே வாசிப்பைச் சரியாகக் கற்றுக் கொடுக்கப்படாததால் இடைநிலைப்பள்ளிக்கு வந்த பிறகும் சிறிதும் வாசிக்க தெரியாமல் சிரமப்படுகின்றனர் (சோல்டா, 2013 ).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இவ்வாறு கற்றல் கற்பித்தலில் தொழிநுட்பத்தைப் பயன்படுத்த ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களையும் மாணவர்களுக்கு வாசிப்புத் திறனில் உள்ள சிக்கல்களையும் கருத்தில் கொண்டு ஆய்வாளர் பவ்டூண் காணொளியின் துணையோடு மாணவர்களின் வாசிப்புத் திறனை குறிப்பாக உச்சரிப்பில் உள்ள பகுதியைக் கொண்டு இவ்வாய்வை மேற்கொண்டுள்ளார் .

## 1.4 ஆய்வு நோக்கம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இவ்வாய்வு மூன்று நோக்கங்களின் அடிப்படையில் நடத்தப்பட்டுள்ளது. அவை:

1) சரியான உச்சரிப்புடன் வாசிப்பதில் மாணவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களை முன்னறித் தேர்வின் வழி கண்டறிதல் .

2) சரியான உச்சரிப்புடன் வாசிப்பதில் மாணவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கலின் காரணங்களை ஆசிரியர்கள் மூலம் பகுத்தாய்தல்.

3) மாணவர்களின் சரியான உச்சரிப்பில் வாசிக்கும் திறனை பவ்டூண் செயலியின் பங்களிப்பைக் கண்டறிதல் .

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**1.5 ஆய்வு நன்மைகள்**

ஆய்வானது எம்மாதிரியாக இருந்தாலும் எந்த ஒரு தரப்பினருக்காவது நன்மையளிக்கும் வகையில் அமைந்திருக்க வேண்டும். அப்போழுது தான் அவ்வாய்விற்காகச் செலவழிக்கப்பட்ட நேரம், பணம் இவைகளோடு, சேர்ந்து செலவழிக்கப்பட்ட உடலுழைப்புப் பயனான ஒன்றிற்குச் செலவழிக்கப்பட்டதாக இருக்கும். இவ்வாய்வு மாணவர்களை மையமிட்டு மேற்கொள்ளப்படுவதால் இவ்வாய்வின் வழி, மாணவர்கள் அதிக நன்மை பெறுகின்றனர். மாணவர்களின் வாசிப்புத் திறனில் ஏற்படும் சிக்கல்களை இந்த

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஆய்வின் வழி கண்டறிய முடிகிறது. அச்சிக்கல் *பவ்டூண்* வழி மேம்படுத்தப்படுகிறது. எனவே, மாணவர்கள் உரக்க வாசித்தல் திறனில் மேன்மை அடைய இவ்வாய்வு வழி வகுக்கின்றது. அதுமட்டுமின்றி , இவ்வாய்வு பிற மாணவர்களுக்கும் நன்மை பயக்கும். ஏனெனில், உரக்க வாசிப்பதில் சிக்கல்களுடைய மாணவர்கள் *பவ்டூண்* அணுகுமுறையைப் பயன்படுத்தித் தங்களின் திறனை மேம்படுத்திக் கொள்ள இவ்வாய்வு துணையாக இருக்கும். மேலும், மாணவர்கள் கற்றல் கற்பித்தலில் ஆர்வமாக ஈடுபட இவ்வாய்வு துணைபுரிகிறது. ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தலில் தொழில்நுட்பத்தைப்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பயன்படுத்திக் கற்பிக்கும் போது மாணவர்கள் ஆர்வமாகச் செயல்படுவர். இதனால், கற்றல் கற்பித்தலில் பாடத்துணைப்பொருள்களின் பங்கு முதன்மையாகும். ஆக, ஆசிரியர் உரக்க வாசித்தல் திறனில் உச்சரிப்பை மேம்படுத்த *பவ்டூண்* பயன்படுத்தி கற்பிக்கும் பொழுது மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ள முடியும் இவ்வாய்வு உரக்க வாசித்தல் திறனை மேம்படுத்த மேற்கொள்வதால் மாணவர்களின் பேச்சுத் திறனை மேம்படுத்தவும் இவ்வாய்வுத் துணைபுரிகிறது . உரக்க வாசித்தல் திறனை மேம்படுத்துவதன் வழி மாணவர்கள் தங்கள் திறனை மேம்படுத்தி போட்டிகளில் பங்கெடுப்பதும் இவ்வாய்வின் வழி கிடைக்கப்பெறும் நன்மையாகும். உச்சரிப்பு ஆகியவற்றைச் சரியாகப் பயன்படுத்தும் உத்திமுறையை அறிந்து கொண்டு மாணவர்கள் பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி ஆகிய போட்டிகளில் பங்குப் பெற வாய்ப்பளிக்கிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தொடர்ந்து, இவ்வாய்வு ஆசிரியர்களுக்கும் நன்மை அளிக்கின்றது. மாணவர்களின் உரக்க வாசிப்பில் எதிர்நோக்கும் சிக்கல்களை எவ்வாறு மேம்படுத்தலாம் என அறியாமல் இருக்கும் ஆசிரியர்கள் இவ்வணுகுமுறையைக் இவ்வாய்வில் கையாளலாம். ஆய்வாளர் வாசித்தலின் உரக்க கூறுகளுக்கு ஏற்ப ஒரு சொல்லை எவ்வாறு உச்சரிக்க வேண்டும் என்பதைப் பயன்படுத்தியுள்ளார். அதன் வழி ஆசிரியர்கள் மாணவர்களின் சிக்கல்களைக் கண்டறிந்து

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அச்சிக்கலுக்கு ஏதுவான உச்சரிப்பு ஒலிப்பதிவுகளைத் தெரிவு செய்ய இவ்வாய்வு உறுதுணையாக இருக்கும் வகுப்பில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கற்பிக்கும் பொழுது மாணவர்களின் ஈடுப்பாட்டை இவ்வாய்வின் கண்டு பிடிப்புகளின் வழி ஆசிரியர்கள் அறிந்து கொள்ள முடிகிறது.

மேலும், ஆசிரியர்கள் இடைநிலைப்பள்ளிகளுக்கான தர அடிப்படையிலான கலைத்திட்டத்தை (KSSM) பள்ளிகளில் நடைமுறைப்படுத்தவும் இவ்வாய்வு துணைப்புரிகிறது. 2017 ஆம் ஆண்டு முதலாம் படிவத்திற்கு அமல்படுத்தப்பட்ட கலைத்திட்டம் கற்றல் கற்பித்தலில் ஆசிரியர்களுக்கு ஒரு சிறு தடுமாற்றம் இருக்கலாம். அதனைக் களைய இவ்வாய்வு ஆசிரியர்களுக்கு உறுதுணையாக அமையும் மாணவர்களிடத்தில் உரக்க வாசித்தல் திறனை அதிலும் உச்சரிப்பை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதை ஆசிரியர்கள் அறிந்து கொள்வர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அடுத்ததாக, பிற ஆய்வாளர்களுக்கும் இவ்வாய்வு நன்மை அளிக்கின்றது. தொழில்நுட்பம் பல்லூடகம் அல்லது வாசித்தல் குறிப்பாக, சரியாக உச்சரித்தல் தொடர்பாக ஆய்வை மேற்கொள்ளவிருக்கும் ஆய்வாளர்களுக்கு இந்த ஆய்வு ஒரு முன் மாதிரியாக அமையும் அதுமட்டுமின்றி புதிய ஆய்வாளர்களுக்கு ஓர்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


ஆய்வு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்ள இவ்வாய்வு துணைபுரியும். இவ்வாய்வின் குறை நிறைகளை அறிந்து பிற ஆய்வாளர்கள் தங்களின் ஆய்வை மேம்படுத்த சிறப்பாக மேற்கொள்ளலாம்.

**1.6 ஆய்வு எல்லை**

இவ்வாய்வை ஆய்வாளர் மாநிலத்தில் பேரா உள்ள ஓர் இடைநிலைப்பள்ளியில் மேற்கொண்டுள்ளார் . இந்தப் பள்ளி நகரப்புறப் பள்ளியாகக் கருதப்படுகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இவ்வாய்விற்குப் படிவம் இரண்டு மாணவர்கள் மட்டுமே உட்படுத்தப்படவுள்ளனர். ஆய்வாளர் தமிழ்மொழிப் பாடத்தைத் தேர்வுப் பாடமாக எடுக்கும் பத்து மாணவர்களை இவ்வாய்வில் உட்படுத்தியுள்ளார். இந்த ஆய்விற்கு பண்புசார் முறை மட்டுமே ஆய்வாளரால் கையாளப்பட்டுள்ளது. இவ்வாய்விற்கு ஆய்வின் கருவிகளாக முன்னறித் தேர்வு, நேர்காணல், *பவ்டூண்* செயலி பயன்படுத்தப்பட்டுள்ளன .

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.7 ஆய்வுச் சான்றாதாரங்கள்

இந்த ஆய்வின் நோக்கத்தை முழுமைப்பெறுவதற்குப் பல மூலங்களிலிருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டன அவ்வகையில் தகவல்களைப் பெறுவதற்கு முதன்மைச் சான்றாதாரம் மற்றும் துணைச் சான்றாதாரம் என இரு வகையான சான்றாதாரங்கள் துணைப்புரிந்தன. இவ்வாய்வுக்கு முதன்மைச் சான்றாதாரமாகப் படிவம் இரண்டு பயிலும் பத்து மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் . மேலும், இரண்டாம் படிவம் கற்பிக்கும் தமிழ் மொழி ஆசிரியரும் இவ்வாய்வின் சான்றாதாரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் அவரிடம் மாணவர்கள் வாசிப்புத் திறனில் உச்சரிப்பில் எதிர்நோக்கும் சிக்கல்களைக் கண்டறிய நேர்காணல் நடத்தப்பட்டது. அதன் வழி கிடைக்கப்பெறும் தரவுகள் பகுப்பாய்வுச் செய்யப்பட்டன.

தொடர்ந்து, துணைச் சான்றாதாரமாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவை இந்த ஆய்வு தொடர்பான புத்தகங்கள், ஆய்வேடுகள், ஆய்வுக் கட்டுரைகள், இணையத்தில் உள்ள சில அகப்பக்கங்கள் ஆகியவை ஆகும். இவைகளிலிருந்து திரட்டப்படும் தகவல்கள் இவ்வாய்வை மேற்கொள்ள துணைப் புரிந்தன. இவைவே இவ்வாய்வின் முதன்மை மற்றும் துணைமைச் சான்றாதாரங்கள் ஆகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.8 கலைச்சொற்கள் விளக்கம்

வழக்கத்தில் குறைவாகப் பயன்படுத்தப்படும் புதிய சொற்களைக் கலைச்சொற்கள் என்று கூறுவார்கள்.

### 1.8.1 வாசிப்புத் திறன்

வாசிப்புத் திறன் என்பது திறன்களுக்கெல்லாம் அடிப்படையாகத் திகழ்கிறது. நூலிலுள்ள கருத்துகளைப் புரிந்துகொள்ள வேண்டுமாயின் நூலை நன்கு வாசிக்க வேண்டும். பிழையில்லாமல், தெளிவாக வாசிக்க கற்றுக் கொள்ளல் வாசிப்பதனாலேயே, பல்துறை அறிவும் பெற முடியும். கொஞ்சும் பருவத்தினின்று துஞ்சுப் பருவம் வரை வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப் பெறும் ஒரு மொழித்திறனே வாசிப்பாகும். மொழியின் வரிவடிவத்தை அடிப்படையாகக் கொண்ட திறன்கள் வாசித்தல் மற்றும் எழுதுதல் ஆகும் .

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


வாசித்தலில் ஆழ்ந்த வாசிப்பு, அகன்ற வாசிப்பு, உரக்க வாசிப்பு, மௌன வாசிப்புப் போன்ற பல்வேறு வகைகள் உள்ளன. ஒருவர் விரைந்து வாசிக்கும் நேரத்தில் உச்சரிக்கும் சமயத்தில் மற்றவர்களுக்குப் பொருள் விளங்காமல் போகக் கூடும். மௌன வாசிப்பின் போது எந்தவொரு சிக்கலும் இருக்காது. எனவே, வாசிப்பு முக்கிய ஒன்றாக அமைகிறது.

### 1.8.2 *பவ்டூண்* (Powtoon)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

*பவ்டூண்* எனப்படுவது ஒரு செயலியாகும். இந்தச் செயலியில் 'Animation' நகரும் படங்களைக் கொண்டு திரைமுறைச் செயலி மற்றும் காணொளிகள் செய்யலாம்.

> ***Powtoon is a company which sells cloud - based software (SaaS) for creating animated presentations and animated explainer videos.***

*பவ்டூண்* எனப்படுவது (SaaS) எனும் மென்பொருளை விற்கும் ஒரு தொழிற்சாலையாகும் இந்த (SaaS) மென்பொருள் நகரும் படங்கள்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



கொண்ட திரைமுறைச் செயலி மற்றும் விளக்கக் காணொளிகள் தயாரிக்க உதவிப் புரியும்.

இந்தப் *பவ்டூண்* செயலியை ‘Ilya Spitalnik’ மற்றும் ‘Daniel Zaturansky' என்ற இருவரும் இணைந்து 24- ஆம் திகதி அக்டோபர் மாதம் 2011-இல் கண்டுபிடித்துள்ளனர் இந்தச் செயலிக் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளுக்குக் காணொளி தயாரிக்கப் பெரும் துணையாக விளங்கி வருகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.9 தொகுப்புரை

இந்த இயலில் இவ்வாய்வைப் பற்றிய மேலோட்ட விளக்கங்கள் கண்டறியப்பட்டுள்ளன . முன்னுரை, ஆய்வுப் பின்னனி, ஆய்வுச் சிக்கல், ஆய்வு நோக்கம், ஆய்வு நன்மை, ஆய்வு எல்லை, கலைச் சொற்கள் போன்றவைகளுக்கு ஆய்வாளரால் விளக்கமளிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் இவ்வாய்விற்கு ஓர் அறிமுகமாக விளங்குகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi